ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2044/11 - 2017 නොවැම්බර් මස 06 වැනි සඳුදා - 2017.11.06

*2044/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கண்டி - வடக்கு பாததும்பர கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் சயிஷ்டன் சேவை நீர்த்தேக்கத்திற்கான உட்பிரவேச வழியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர" புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஒற்றோபர் 30,*
*5/2/1/1316.*

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், அலவதுகொடை கிராம அலுவலர் பிரிவில் சயிஷ்டன் தோட்டத் தொகுதி கிராமத்தில் அமைந்துள்ள சயிஷ்டன் தோட்டத் தொகுதி என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 14 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | திரு. ஜீ. வெலகெதர உரிமை கோருகின்ற இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| கிழக்கு | : | திரு. ஜீ. வெலகெதர உரிமை கோருகின்ற இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ; |
| தெற்கு | : | திரு. ஜீ. வெலகெதர உரிமை கோருகின்ற இக்காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் அலவது கொடயில் இருந்து மல்கம்மன்தெனிய வரையிலான வீதி ; |
| மேற்கு | : | திரு. ஜீ. வெலகெதர உரிமை கோருகின்ற இக்காணியின் மீதமாயுள்ள பகுதி மற்றும் பிரதேச சபை வீதி. |

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* திரு. எச். எம். ஜீ. வெலகெதர,
சயிஷ்டன் பங்களா,
அலவதுகொட.

*11-941*

LAND/MP/2631

## திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1974/47 ஆம் இலக்க, 2016.06.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 1A பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் காணியின் பெயர் க்லேன் எலபின்வத்த படகல பிரிவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், நிலஅளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் B/BWL/2016/351 ஆம் இலக்க முன்கூட்டிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பலகல்ல வத்த என திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர" புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 30.
5/2/2/1184.

11-942

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.